මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ ලේකම් කාර්යාලය, අංක 02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல. : LAE/2025/04** **2025.03.06**

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 26 ஆம் பிரிவின் கீழ் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபை, தெஹிஅத்தகண்டிய பிரதேச சபை, மன்னார் மாவட்டத்தின் மன்னார் பிரதேச சபை, கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச சபை, காலி மாவட்டத்தின் எல்பிட்டிய பிரதேச சபை தவிர்ந்த நாட்டின் ஏனைய அனைத்து உள்ளூர் அதிகாரசபைகளுக்கும் மாநகர முதல்வர்/ பிரதி மாநகர முதல்வர்/ தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலுக்கு பெயர் குறித்த நியமனங்களை ஏற்றுக்கொள்வதற்கான அறிவித்தல் 2025 மார்ச் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து சம்பந்தப்பட்ட அனைத்து உள்ளூர அதிகாரசபைகளிலும் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் முதலாவது பெயர் குறித்த நியமனப் பத்திரத்திலும் இரண்டாவது பெயர் குறித்த நியமனப் பத்திரத்திலும் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும், முதலாவது மற்றும் இரண்டாவது பெயர் குறித்த நியமனப் பத்திரங்களில் உட்சேர்க்கப்பட வேண்டிய குறைந்தபட்ச இளைஞர் மற்றும் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் அல்லது சுயேச்சைக் குழுவொன்றினால் வைப்புச் செய்யப்பட வேண்டிய வைப்புப் பணம் பற்றிய தகவல்களும் உரிய பெயர் குறித்த நியமன அறிவித்தலிலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2425/70 ஆம் இலக்க, 2025.03.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் இத்தகவல்கள் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ளன என்பது மேலும் அறிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்